தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 15 மடல் 12 டிசம்பர் – 2015 ₹1.00

## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

**அன்பிற்கினிய அனைவருக்கும்,**

**வாழ்த்துகள்!**

**முதலில் என் இனிய, வளமான புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**



தமிழ் நாடு அரசு, வேளாண்மை தொடர்பான சிக்கல்கள் மற்றும் தமிழ்நாட்டின் நிலமற்ற மற்றும் ஏழை விவசாயிகளை வறுமையிலிருந்து காக்கும் வகையில் அவர்களின் நிலையான வருவாய்க்குக் கால்நடைப் பராமரிப்பு, கோழி வளர்ப்பு மற்றும் இவை தொடர்பான சார்புத் தொழில்கள் குறித்த பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை அறிவித்துள்ளது. இத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டின் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவை–களை வலுப்படுத்தியிருக்கிறார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் வகையில் ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; திருவண்ணாமலை, விழுப்புரம், இராஜபாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் தேனி, உழவர் பயிற்சி மையத்தில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடுசெய்து, அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் கட்டடப்பட்ட புதிய கட்டடங்களை 15.07.2015அன்று திறந்துவைத்தார். உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தியதன் காரணமாக 2015–16ஆம் கல்வியாண்டில் இருந்து பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச்.–இல் மாணவர் சேர்க்கை 280இலிருந்து 320ஆக அதிகரித்துள்ளது. பர்கூர் மாட்டினத்தைப் பாதுகாக்கவும், அம்மாடுகளை வளர்க்கும் மலைவாழ் மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கவும் ரூபாய் 8.00 கோடியில் ஈரோடு மாவட்டம், பர்கூரில் பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம் புதிதாக நிறுவப்பட்டுள்ளது.

**“சிலர் நடப்பவற்றை ஏன் என்று கேட்கின்றனர்
நான் ஏன் அது அப்படியல்ல என்று கேட்கின்றேன்”**

**– ஜார்ஜ் பெர்னாட்ஷா**

“பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையம்”, குறைந்த விலையில் பண்ணையாளர்க்குப் பயனுள்ள கால்நடை மற்றும் கோழியினத் தொழில்நுட்பங்கள் மற்றும் கருவிகளை உருவாக்கித் தருவதற்காக நிறுவப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் பல்வேறு ஆய்வகங்களில் உள்ள சிறந்த வசதிகள் தேசிய மற்றும் பன்னாட்டு நிதியுதவி முகமைகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, பல்கலைக்கழகம்மூலம் மாணவர் / இராணுவப் பணியாளர் பொருட்டுக் கால்நடை மருத்துவ அறிவியலில் செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி தொடர்பான இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன.

உலகத் தரத்திற்கு இணையாகக் கால்நடை நலம் மற்றும் மருத்துவச் சேவைகளைப் பல்கலைக்கழகம் அளித்துவருவது யாவரும் அறிந்த உண்மையாகும். தஞ்சாவூர், நாமக்கல், மதுரை, காஞ்சிபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் தொலைவில் உள்ள கிராமங்களின் ஏழை கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்களின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் தமிழ்நாடு அரசு, நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் நிறுவுவதற்கு ரூபாய் 6.34 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், பறவையின மற்றும் செல்லப் பிராணிகளுக்குச் சிறப்பு மருத்துவச் சிகிச்சை அளிக்கும் வகையில் “பறவையின மற்றும் செல்லப் பிராணிகள் மையம்” தொடங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பணிகளில் “முதலில் விவசாயி” என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. முதல் முறையாக, பல்கலைக்கழகத்தின் நிறுவன நாளான செப்டம்பர் 20ஐ முன்னிட்டு, கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர் தினம் 19.09.2015 மற்றும் 20.09.2015ஆம் தேதிகளில் திருச்சிராப்பள்ளியில் கொண்டாடப்பட்டது. இதில் 5000 விவசாயிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். வழக்கமாக நடத்தப்படும் கால்நடைப் பண்ணை சார்ந்த மற்றும் கால்நடைப் பண்ணை சாராத பயிற்சிகள் அல்லாது, விரிவாக்கப் பணியானது பண்ணைசார்ந்த நடவடிக்கையை ஊக்கப்படுத்தும் வகையில் இடுபொருட்களை அதிகப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது. “மேய்க்கால் புறம்போக்கில் பசுந்தீவன உற்பத்தித்” திட்டம், ரூபாய் 694.80இலட்சத்தில் வேலூர் மற்றும் விழுப்புரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 62 மெட்ரிக் டன் பசுந்தீவனம் சாகுபடி செய்யப்பட்டு, 42 மெட்ரிக் டன் பசுந்தீவனம் கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்போருக்கு வெள்ள நிவாரணமாக வழங்கப்பட்டது. ரூபாய் 100.00 இலட்சத்தில் ஊரக இந்தியாவில் பல்நோக்குச் செயற்கைமுறைக் கருவூட்டல் தொழில்நுட்பர் திட்டத்தின்கீழ் “மாடுகளில் செயற்கைமுறைக் கருவூட்டல்” (மைத்ரி) பயிற்சி, 500 வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவி

ரூபாய் 86.95 இலட்சத்தில் “கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி”, மனித வளத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் வகையிலும் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதைய இக்கட்டான சூழலில் கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்களின் இடர்ப்பாடுகளைக் களையும் வகையிலும், அவர்களின் கால்நடை மற்றும் கோழிகளைத் துன்பத்திலிருந்து விடுபடச் செய்து அவற்றின் உற்பத்தியை மீண்டும் அடையும் வகையிலும் “பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பக் குழு” செயல்பட்டு வருகின்றது. மேலும், “பல்கலைக்கழகத்தின் சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம்கள்” வெள்ளம் பாதித்த மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் 20,000 கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடைகளுக்குத் தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டதோடு பசுந்தீவனம், செல்லப்பிராணிகளுக்கான உணவு, தாதுப்பு, தாதுப்புக் கட்டி மற்றும் பசுந்தீவனக் கரணைகள் ஆகியவை பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டன. பல்கலைக்கழகப் பணியாளர்கள் தாமாக முன்வந்து, மனப்பூர்வமாகத் தங்களின் ஒரு நாள் ஊதியத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளனர். பல்கலைக்கழகத்தின் சார்பாக மீண்டும் என்னுடைய **புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து,** இப் பல்கலைக்கழகத்திற்கு எப்போதும் “விவசாயிகளுக்கான சேவையே முதன்மை” என்பதைத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளருக்கும் உறுதிப்படத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு–2016ஆம் ஆண்டிற்கான என்னுடைய முக்கியமான செய்தி இதுதான்.

**“விளைவுகளைக் கவனித்தீர்களானால் மாற்றங்கள் நேராது.**

**ஆனால், மாற்றங்களைக் கவனித்தீர்களானால் விளைவுகள் நேரும்”**

**இனிய நல்வாழ்த்துகள்**

**முனைவர் சு. திலகர்,**

துணைவேந்தர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

### பல்கலைக்கழகப் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையம் – திறப்பு விழா



குறைந்த விலையில் பண்ணையாளர் வாங்கத்தக்க வகையில் கால்நடை மற்றும் கோழியினத் தொழில்நுட்பங்கள் மற்றும் கருவிகளை உருவாக்கித் தருவதற்கான பல்கலைக்கழகப் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையம், பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது. இம் மையத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 20.11.2015அன்று குத்து விளக்கேற்றித் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழகப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

### நீலநாக்கு நோய் குறித்த பயிலரங்கு



பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மையத்தின் தடுப்பு மருந்து ஆராய்ச்சி மையம் – நச்சுயிரித் தடுப்பு மருந்துமூலம் “நீலநாக்கு நோய் நுண்மப்பரப்பியை அடையாளங்காணல்” குறித்த பயிலரங்கு 02.11.2015முதல் 06.11.2015 வரையிலும், நீலநாக்கு நோய் குறித்த அனைத்திந்திய இணைப்புத் திட்டத்தின் அறிவியலாளர்கள் கூட்டம் 02.11.2015 மற்றும் 03.11.2015ஆம் தேதிகளிலும் நடத்தப்பட்டன. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துத் துவக்கவுரை ஆற்றினார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைமை இயக்குநர் (கால்நடை நலம்) முனைவர் கயா பிரசாத் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பயிலரங்கின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பயிலரங்கின் அறிமுகவுரையை இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தின் CADRADஇன் இணை இயக்குநர் மற்றும் AINBTஇன் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி.கே. குப்தா அவர்கள் வழங்கினார். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் உரையாற்றினார். ஆஸ்திரேலியாவின் வடக்கு மண்டலத்தின் வேளாண் துறையின் பூச்சியலாளர் டாக்டர் க்ளென் பெல்லிஸ் அவர்கள் பயிலரங்கில் பங்கேற்றுத் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். முன்னதாக, பல்கலைக் கழகத்தின் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஜ. கணேசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நாடு முழுவதிலும் இருந்து அறிவியலாளர்கள் பங்கேற்றனர். மேலும், அஸ்காடு திட்டத்தின்கீழ் “நீலநாக்கு நோயைக் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்தல்” குறித்த ஒரு நாள் பயிலரங்கு 17.11.2015அன்று நடத்தப்பட்டது. விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் பயிலரங்கிற்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர், நீலநாக்கு நோயைக் கட்டுப்படுத்த உரிய நேரத்தில் தடுப்பு மருந்து அளித்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் துறை சார்ந்த 75 கால்நடை மருத்துவர்கள் மற்றும் 20 பாட வல்லுநர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர். தடுப்பு மருந்து ஆராய்ச்சி மையம் – நச்சுயிரித் தடுப்பு மருந்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஒய். கிருஷ்ண மோகன் ரெட்டி அவர்கள் பயிலரங்கை ஒருங்கிணைத்தார்.

### கல்லூரி, விடுதி மற்றும் விளையாட்டு நாள் விழா

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கல்லூரி மற்றும் விடுதி நாள் விழா 06.11.2015அன்று நடைபெற்றது. சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. சுவாமிநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சிறப்புரை ஆற்றி, முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள், சிறந்த நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்களுக்கு விருதுகள் மற்றும் சிறந்த முறையில் அறையைப் பராமரித்தல் விருதுகளை வழங்கினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார்.



விடுதிக் காப்பாளர் முனைவர் வி. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் விடுதி ஆண்டு அறிக்கை வாசித்தார். இறுதியாண்டு மாணவி செல்வி எஸ். சஹானா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாண்டு மாணவன் செல்வன் எம். திவாகர் அவர்கள் நன்றி கூறினார்.

கல்லூரியின் விளையாட்டு நாள் விழா 05.11.2015அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுத் தலைமையுரை ஆற்றினார். சேலம், தேசிய மாணவர் படையின் நிர்வாக அலுவலர் லெப்டினென்ட் கலோனல் ஆர்எஸ்என். சதிஷ் அவர்கள் விளையாட்டுப் போட்டியைத் துவக்கிவைத்து, பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். விளையாட்டுப் போட்டிச் செயலாளர் முனைவர் பி. வாசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விளையாட்டுப் போட்டியின் இணைச் செயலாளர் முனைவர் பி. அன்பரசி அவர்கள் ஆண்டு விளையாட்டுப் போட்டி அறிக்கை வாசித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாண்டு மாணவன் செல்வன் எஸ். செந்தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார். தடகளப் போட்டியில் ஆடவர் பிரிவில் இறுதியாண்டு மாணவர் டி. சதீஸ்குமார், மகளிர் பிரிவில் இரண்டாம் ஆண்டு மாணவி எம். பிரியா ஆகியோர் ஒட்டுமொத்த வாகையர் பட்டத்தை வென்றனர்.

## முத்தமிழ் விழா

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 04.11.2015அன்று முத்தமிழ் விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். சென்னை, பொதிகைத் தொலைக்காட்சியின் உதவி இயக்குநர் டாக்டர் பால. இரமணி அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று “இளந்தென்றல்” மாணவர் படைப்பிதழை வெளியிட்டு, போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கி உரையாற்றினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்மன்ற அமைப்பாளர் பேராசிரியர் முனைவர் க. பாலசுந்தரம் அவர்கள் தமிழ் மன்ற அறிக்கை வாசித்தார். தமிழ் மன்ற மாணவர் செயலாளர் செல்வன் ஜி. சுரவணன் வரவேற்புரை ஆற்றினார். இளந்தென்றல் இதழின் ஆசிரியர் செல்வன் எம். சிவமணிகண்டன் இதழ் குறித்து அறிக்கை வழங்கினார். தமிழ் மன்ற இணைச் செயலாளர் செல்வி கே. நந்தினி நன்றி கூறினார்.

## குறுகிய காலப் பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உணவியல் துறைமூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் “தீவன மேலாண்மையின் மூலம் பால், இறைச்சி மற்றும் முட்டையின் ஊட்டச்சத்து மதிப்பு கூடுதல்” என்ற குறுகிய காலப் பயிற்சி 16.11.2015 முதல் 25.11.2015 வரை நடத்தப்பட்டது. விரிவுரைகளும், மதிப்புக் கூட்டிய பால் மற்றும் இறைச்சிப் பொருட்கள் தயாரிப்புச் செய்முறையும் களப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. இந்தியாவில் பல்வேறு பகுதியிலிருந்து மொத்தம் 15 பேர் கலந்து கொண்டனர்.

## செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின அறிவியல் துறை, கால்நடை உற்பத்திப் பொருட்களின் தொழில்நுட்பத் (பால்வள அறிவியல்) துறை மற்றும் கால்நடை உணவியல் துறைகள்மூலம் “கோழிக்குஞ்சு பொரித்தல் மேலாண்மைத் தொழில்நுட்பம்”, “கோழிகளுக்கான தடுப்பூசி அளிப்பவர்”, “பால் பதன நிலைய இயக்கம் மற்றும் மேலாண்மை”, “மதிப்பூட்டிய பால் பொருள்கள் தயாரித்தல் தொழில்நுட்பம்”, “கால்நடைத் தீவன ஆலை இயக்கம் மற்றும் மேலாண்மை”, “கால்நடைகளுக்கான அடர் தீவனம் தயாரித்தல் தொழில்நுட்பம்” குறித்த செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சிகள் செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2015இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளின் நிறைவு விழா 26.11.2015அன்று



நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பயிற்சி நிறைவு செய்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். கல்லூரியின் கோழியின அறிவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மு. மணி அவர்கள் நன்றியுரை வழங்கினார். மேலும், தொலைநிலைக் கல்வி இயக்குநர், முர்ரா எருமைப் பண்ணையில் இனவிருத்தியில் உள்ள தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பற்றிய அறிவியல் கருத்துகளை மாணவர்களுக்கு விளக்கினார்.

## விவசாயிகள் பயிலரங்கு



குன்றக்குடி, வேளாண் அறிவியல் நிலையம்மூலம் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமையின் நிதியுதவியில் “கறவை மாடுகளில் இனப்பெருக்கத் திறனை அதிகரித்தலுக்கான வழிமுறைகள்” பற்றிய பயிலரங்கு, சிவகங்கை மாவட்டத்தின் சாலை கிராமத்தில் 24.11.2015அன்று நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி சு. மலர்விழி இ.ஆ.ப. அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, உரையாற்றிப் பயிலரங்கு குறித்த கையேடு மற்றும் துண்டுபிரசுரம் வெளியிட்டு, இடுபொருட்களைப் பண்ணையாளர்களுக்கு வழங்கினார். கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் இராம. விஸ்வநாதன், வேளாண்மை இணை இயக்குநர் திரு. இரா. குருமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக, வேளாண் அறிவியல் நிலையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சு. செந்தூர்குமரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். 525 பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## விருது

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகத்தின் வேளாண் வானிலை ஆலோசனை மையத்திற்கு “சிறந்த கிராம வேளாண் வானிலை ஆலோசனைச் சேவை விருது–2015” வழங்கப்பட்டது. இவ்விருது, கர்நாடக மாநிலத்தின் தார்வாட் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில் 23.11.2015 முதல் 26.11.2015 வரை நடைபெற்ற இந்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் இந்திய வானிலைத் துறையின் ‘கிராம வேளாண் வானிலை ஆலோசனைச் சேவைத்’ திட்டத்தின் ஒன்பதாவது ஆண்டு மறுஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்டது.

## வினாடி வினாப் போட்டி

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக மருந்தியல் தொடர்பான

Posted on 29.12.2015 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 28.12.2015

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

வினாடிவினாப் போட்டி 24.11.2015 அன்று நடைபெற்றது. போட்டியில் ஒன்பது மாணவர் குழுக்கள் கலந்து கொண்டன. போட்டியினைக் கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் துவக்கி வைத்தார். போட்டியினை நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர் முனைவர் வ. ரங்கநாதன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

### பாராட்டு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தேசியத் தன்னார்வ இரத்ததானத்திற்கான சிறந்த ஒருங்கிணைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டது. 29.10.2015அன்று நடைபெற்ற தன்னார்வ இரத்ததானத்திற்கான பாராட்டு விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. வி. தட்சணாமூர்த்தி இ.ஆ.ப. அவர்கள் பாராட்டுப் பத்திரம் மற்றும் நினைவுப் பரிசைக் கல்லூரிக்கு வழங்கினார். இப்பரிசினை 05.11.2015அன்று நடைபெற்ற கல்லூரி விளையாட்டுத் தின விழாவில் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்களிடமிருந்து நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் மருத்துவர் மு.ஜெ. இராஜா மற்றும் மருத்துவர் கே. தேவிப்ரியா ஆகியோர் பங்கேற்றனர்.

### நன்கொடை



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் 1985ஆம் கல்வியாண்டைச் சார்ந்த 40 முன்னாள் மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் நந்தனம் வளாகத்தில் கட்டப்பட உள்ள பல்கலைக்கழக முன்னாள் மாணவர் இல்லத்திற்காக ரூபாய் 6.15இலட்சம் நன்கொடை வழங்கினர். இத்தொகைக்கான காசோலையை 20.11.2015அன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்களிடம் முன்னாள் மாணவர்கள் சார்பாக முனைவர் என். ராஜசேகரன், முனைவர் கே.என். செல்வகுமார், முனைவர் ஏ. ஸ்ரீதர், முனைவர் எஸ். வெங்கடேஸ்வரன், முனைவர் பி. ராமர் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் மற்றும் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் இல்லத் தலைவர் முனைவர் தி. சிவக்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

### பெயர் சூட்டல் நிகழ்ச்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்குக் காரணமான முன்னோடி கால்நடை மருத்துவ அறிஞர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக நிர்வாகக் கட்டடத்திற்கு டாக்டர் எம்.பி. ஆறுமுகம் கட்டடம் என்றும், கல்விநிலையக் கட்டடங்களுக்கு டாக்டர் ஆர். ராமமூர்த்தி கட்டடம், டாக்டர் எஸ். சண்முகசுந்தரம் கட்டடம், டாக்டர் ப. சதாசிவம் கட்டடம் என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளன. புதிதாகப் பெயர் சூட்டப்பட்ட கட்டடங்களைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 30.11.2015அன்று திறந்துவைத்தார்.

### பணி ஓய்வு



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கோழியின அறிவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா. இராமமூர்த்தி அவர்கள் 30.11.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 22.11.1955இல் பிறந்த இவர், 35 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சொ.ரா. சீனிவாசன் அவர்கள் 30.11.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 01.12.1955இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் உடைமை அலுவலகத்தின் செயற்பொறியாளர்(மின்னியல்) திரு. சி. ஜெகநாதன் அவர்கள் 30.11.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 13.11.1957இல் பிறந்த இவர், 29ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சாந்திநல்லா, ஆடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் திறனறி பணியாளர் திரு. ஆர். போஜராஜ் அவர்கள் 30.11.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 13.11.1955இல் பிறந்த இவர், 37 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.

### இரங்கல்



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் விலங்கின மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சா. பன்னீர்செல்வம் அவர்கள் 20.11.2015அன்று இயற்கை எய்தினார். 29.06.1956அன்று இராசிபுரத்தில் பிறந்த இவர், 1979இல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளநிலைப் பட்டப் படிப்பை முடித்தார். நமது பல்கலைக்கழகத்தில் 1980ஆம் ஆண்டு உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். 2007முதல் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் விலங்கின மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவராகப் பணியாற்றி வந்தார். இவர் காங்கேயம் மாடு மற்றும் கோயம்புத்தூர் செம்மறியாட்டு இனங்கள் குறித்த திட்டங்களில் சிறப்பாக பணியாற்றியுள்ளார். இவருக்கு மனைவியும், ஒரு மகன், ஒரு மகள் மற்றும் பேரக்குழந்தையும் உள்ளனர்.